மலேசிய நண்பன்
25 October 2017 (Wednesday)



நிதி பெற்ற இயக்கங்களுடன் டத்தோ லோகேந்திரன், தெய்வீக வாழ்க்கை சங்கப் பொறுப்பாளர் மனோகரன்.

# மேட்ரிக்ஸ் மேம்பாட்டு நிறுவனம் சமூக பணிகளுக்காக பெரும் நிதி ஒதுக்கீடு

(துர்க்கா)

சிரம்பான், அக். 25-

நெகிரி செம்பிலான் மாநிலத்தில் பிரசித்தி பெற்ற பண்டார் ஸ்ரீ செண்டயான் வீடமைப்பு நிறுவனமான மேட்ரிக்ஸ் மேம்பாட்டு நிறுவனம் சமூக பணிகளுக்கு பெரும் நிதி ஒதுக்கீடு செய்து மக்களுக்கு உதவி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

சுங்கை காடுட், பண்டார் சிரம்பான் செலாத்தான் குடியிருப்பில் இருக்கும் தெய்வீக வாழ்க்கை சங்கப் பொறுப்பாளர் மனோகரன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் பாலர் பள்ளி சிறுவர்களுக்கும் தாய்மார்களுக்கும் தீபாவளி அன்பளிப்பு பொருட்களை வழங்கிய பிறகு பேசிய மேட்ரிக்ஸ் நிறுவன இயக்குநர் டத்தோ என்.லோகேந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.





மேட்டிரிக்ஸ் நிறுவனம் பொருளாதார மேம்பாட்டை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருக்காமல் பல தரப்பட்ட சமூக பணிகளை செய்வதுடன் ஸ்ரீ செண்டயான் வீடமைப்பு பகுதியில் 20 கோடி வெள்ளி செலவில் புதிய நவீன தமிழ்ப் பள்ளியைக் கட்டிக் கொடுத்துள்ளது.

இந்த புதிய பள்ளியில் அதி நவீன வசதிகளுடன் மாணவர்கள் விளையாடக்கூடிய கால்பந்து அரங்கமும் 1500 பேர் அமரக்கூடிய பெரிய மண்டபம் உள்ளதால் இந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளதாக அவர் கூறினார்.



தீபாவளி அன்பளிப்பை டத்தோ லோகேந்திரன் வழங்குகிறார்

இதனிடையே, இந்நிகழ்வில் பண்டார் சிரம்பான் செலாத்தான் குடியிருப்பில் இயங்கும் செனாவாங் கிளையின் தெய்வீக வாழ்க்கை சங்கம் நடத்தும் பாலர் பள்ளி மாணவர்களின் கல்விக்கு உதவும் மேட்ரிக்ஸ் நிறுவனம் வெ.35 ஆயிரம், மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கு வெ.10 ஆயிரம், பெண்கள், குழந்தைகளை பாதுகாக்கும் சங்கத்திற்கு வெ.10 ஆயிரத்தை மேட்ரிக்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் டத்தோ என்.லோகேந்திரன் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.